# இருளும் ஒளியும்

இரவிலிருக்கும் இருளும்
பகலில் இருக்கும் ஒளியும்
வாழ்க்கையின் இரண்டு பக்கங்களாகும்.

துன்பம் வரும்போது நாம்
இருள் எனும் அறைக்குள் மூழ்கிப்போகிறோம்
இன்பம் வரும்பொது நாம்
ஒளி எனும் பிரகாசத்தில் மகிழ்கிறோம்.

நாம் காண்கின்ற உலகம் ஒரு
மாய ஆகும்
அது இருட்டாலும் ஒளியாலும்
சூழ்ந்திருக்கிறது.

மனிதனோ அந்த மாயக்கூட்டத்துக்குள்
வாழும் பொம்மைகளோ
வாழ்வில் இன்பத்தையும் துன்பத்தையும்
தாங்கி கொண்டு வாழ்கிறான்.

துன்பம் வந்தால் நாம் இருட்டில்
அலையும் குருடனைப்போல் இறிக்கிறோம்
ஆனால் ஞானம் எனும் ஒளியைக்

கொண்டு தப்பிக்க நாம் முயற்சிப்பதில்லை

நாம் துன்பத்தை சொல்லி
புலம்புகிறோம் ! அழுகிறோம் !
பிரச்சனையிலிருந்து மீண்டு வர
முடியாமல் தவிக்கிறோம்.

இன்பம் வந்தால் எல்லாத்தையும்
மறந்துவிட்டு சிரிக்கிறோம்
அதை நினைத்து மகிழ்கிறோம்
இது தான் மனிதனின் குணம்.

இருட்டை துன்பத்துடனும்
ஒளியை இன்பத்துடனும்
ஒப்பிடுவது மனிதனே !
மனிதனின் குணமே !

இருட்டில் எவ்வாறு வழியை
கண்டுப்பிடிப்பதென்று தெரியாமல்
அலைகிறோமோ அதைப்போல்
வாழ்க்கையில் வரும் பிரச்சனைகளிலிருந்து
தப்பிக்க வழி தெரியாமல்
நாம் திணறுகிறோம்.

ஒளியிருக்கும் அறையில் சுலபமாக
அனைத்தையும் காண்பதுப்போலவே
இன்பத்தில் நாம் சிரித்து
மகிழ்கிறோம் . . .

அதுவே நம் வாழ்க்கையில்
இன்ப துன்பத்திற்க்குக் காரணம்.

உன் துன்பம் எவ்வளவு பெரியது
என்று இறைவனிடம் சொல்வதைவிட
உந்தன் அருகே எவ்வளவு பெரிய
இறைவன் இருக்கிறார் என்று
துன்பத்திடம் சொல்வதே ~~மேல்~~ நன்று.

இருட்டை பயக்காதே !
ஒளியை விரும்பாதே !
ஏன் எனில் இரண்டும்
வாழ்க்கையின் பக்கங்களே.

இருட்டை பயப்படுபவன்
உயிரிருக்கும் பிணமாகும்
அவனால் வாழ்க்கையில்
வெற்றியை அடையவேமுடியாது.

இருட்டை கண்டு ஓடாதே.
இருள் உன்னை கண்டு ஓடவேண்டும்
ஒளியை தேடி போகாதே
ஒளி உன்னை தேடி வரவேண்டும்.

இருட்டின் நாசமே
ஒளியின் பிறப்பாகும்.
இருளை வெல்பவனுக்கு
ஒளி தானாக கிடைக்கும்.

ஈயலோ வாழ்வது சிறிது
நேரமாக இருக்கலாம்
ஆனால் அது நன் சிறகால்
இருட்டையும் ஒளியையும்
பார்க்காமல் பறந்து செல்கின்றது.

ஈயல் விளக்கிலிருக்கும்
ஒளியில் விழுந்துதான் சாகிறது
ஆனால் அது விளக்கை
கண்டு பயப்படுவதில்லை.

மிருகங்கள் இருட்டையும்
துன்பத்தில் வேட்டையாடித்தான்
ஒளியெனும் இன்பத்தை
அடைகிறார்கள்.

மிருகங்களோ இருளை
கண்டு பயப்படுவதில்லை
பறவைகளும் இருளை
கண்டு பயப்படுவதில்லை!

பின்பு மனிதன் மட்டும்
ஏன் பயப்படவேண்டும் ??

விதியை நம்மால் மட்டுமல்ல
யாராலும் மாற்றமுடியாது
நமக்கு வரவிருக்கும்
இருட்டையும் ஒளியையும் மாற்றமுடியாது

ஆனால் அதிலிருந்து மீண்டு
வருவதே புத்திசாலித்தனமாகும் .

உன் பயத்தை பிறரிடம்
சொல்லி கோழையாகாதே !
உன் பயத்தை இல்லாதாக்கி
கொண்டு வீரனாகு .

இருட்டும் நமக்கு நன்மையை தரும்
ஒளியும் நமக்கு நன்மையை தரும் .
பாடத்திலிருந்து கற்றுக்கொள்வதே மகிமை .
இல்லாவிட்டால் வாழ்க்கை வெறும் வெறுமை .

இருள் துன்பத்தை தந்தாலும்
ஒளி இன்பத்தை தந்தாலும்
இரண்டும் காலத்தின் கட்டாயமாகும் .